
ஆக்ஸ்பர்ட் வாசகபுஸ்தகம்



பால சிக்ஷை

முதல் பாகம்

விலை
ஒரு அணா
மூன்று பை



இந்தப் புஸ்தகத்தில் கற்றுக்கொடுக்கும் எழுத்துக்கள்

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ

ஐ ஒ ஓ ஔ

க ங ச ஞ ட ண

த ந ப ம ய ர ல

வ ழ ள ற ன

க் ங் ச் ஞ் ட் ண்

த் ந் ப் ம் ய் ர் ல்

வ் ழ் ள் ற் ன்

க்ஷ ஷ ஸ ஜ ஹ

---

1 2 3 4 5 6 7 8 9 10

OXFORD TAMIL READERS

FIRST PRIMER

BY

S. V. RANGASWAMI AIYANGAR, B.A.

Formerly Vice-Principal, Zamorin's College

ஆக்ஸ்வர்ட்

பால சிக்ஷை

(முதல் பாகம்)

ஸாமோரின் ராஜாவுடைய காலேஜில்

வைஸ்-ப்ரின்ஸிபலாயிருந்த

எஸ். வீ. ரெங்கஸ்வாமி அய்யங்கார், பீ. ஏ.

எழுதியது

THIRD EDITION

மூன்றாம் பதிப்பு

OXFORD UNIVERSITY PRESS

BOMBAY AND MADRAS

ஆக்ஸ்வர்ட் ஸர்வகலாசாலை ப்ரெஸ்

சென்னை

1920

PRINTED AT THE
GUARDIAN PRESS MADRAS.

முன்னுரை

குழந்தைகளுக்குச் சிரமம் உண்டாக்காமல் கற்பிக்கவேண்டும் என்பது

ஐரோப்பாவில் நாளுக்குநாள் பாலர்களுக்குக் கல்வி கற்பிக்கும் முறை விருத்தியாகிக்கொண்டேவருகின்றது. குழந்தைகளின் தன்மையை நன்ருய்க் கவனித்தறிந்த வித்துவான்கள் சரியான போதனு முறை எதுவெனத் தீர ஆலோசனைசெய்து தங்களுடைய அபிப்பிராயத்தைப் பத்திரிகைகளிலும் கிரந்தங்களிலும் வெளிப்படுத்தியிருக்கிருர்கள். அதை அனுசரித்து நாம் சொல்வது என்னவென்ருல், குழந்தைகளைச் சிரமப்படுத்தாமல் வேடிக்கை விளையாட்டுடனும், பாட்டோடுங் கூத்தோடும், கல்வி கற்பிக்க வேண்டுமென்பதே. தவிர, வாசக புஸ்தகங்களில் சாஸ்திர விஷயங்களைப் புகட்டவேண்டும் என்னும் அவசியமேயில்லை. மிகச் சிறுவர்களுக்காக உத்தேசிக்கப்பட்ட புஸ்தகங்களில் அவர்களுக்கு எளிதில் புரியாத பதங்களை உபயோகிக்கக் கூடாது. மேலும் சன்மார்க்க முறைகளைக் கதைகளாலும் திருஷ்டாந்தங்களுடனும் போதிப்பதைவிட்டு, "அறஞ்செய விரும்பு," "ஆறுவது சினம்" எனச் சிறுவர்களுக்குக் கற்பிப்பது வெகு அனுசிதமே.

அரிச்சுவடி முழுவதையும் ஆரம்பத்தில் கற்பிக்கப்படாது என்பது

தமிழ்ப் பாஷையின் எழுத்துக்கள் எல்லாவற்றையும் குழந்தைகள் முதலிலே கற்றுக்கொள்ளவேண்டிய அவசியமேயில்லை. மாதக்கணக்காய் எழுத்துக்களை மாத்திரம் கற்றுக்கொண்டிருப்பது பிள்ளைகளுக்கு அலுப்பாயும் இருக்கும்; மேலும் படிப்பில் உற்சாகமில்லாமலும் போய்விடும்.

ஆரம்பத்தில், கஷ்டப்படுத்தாமல், சில வெழுத்துக்களை மாத்திரம் கற்பித்து, அவைகளைக் கொண்டு பிள்ளைகளுக்குப் பழக்கமான வார்த்தைகளைப் போதித்தால், அவர்களுக்கு அதிக சந்தோஷமுண்டாகும். கூடிய சீக்கிரத்தில் வாக்கியங்களையும் வாசிக்கத் தெரிந்துகொண்டால் அவர்களுக்கு மகிழ்ச்சி அதிகமாகும்.

சுலபமாய் எழுதக்கூடிய எழுத்துக்களை முதலில் கற்பிக்க வேண்டும் என்பது

ஆ, இ, ஊ, ஔ முதலிய அக்ஷரங்களை ஆரம்பத்திலேயே எழுதக் கற்றுக்கொள்வது பிரயாசை. இதுவும் அனவசியமான பிரயாசையே: வளைவில்லாமல் நேர்க்கோடுகள் அடங்கிய எழுத்துக்களை முதலில் கற்பித்து, உருவத்தில் அதிக வித்தியாசமில்லாத

மற்ற எழுத்துக்களை அதன் பின்பு போதிக்கவேண்டும். உதாரணமாக: ட எழுதத்தெரிந்தபின், ப வைக் கற்றுக்கொள்வது சுலபம். சுலபத்தில் ப, ம ஆகும்; ப, ய ஆகும்; ப, வ ஆகும்; வ, ல ஆகும். க வைக் கற்றபின் ச வையும் த வையும் எழுதக் கற்பதில் சிரமமில்லை. ன, ண ஆவதும், ர, ற ஆவதும் அதேவிதம் எளிதுதான்.

படங்களைக் காட்டிப் பெயரைச் சொல்லிவைக்கவேண்டும்.

பெயரைச் சொல்லி, சப்தங்களைப் பிரிக்கவேண்டும்.

சப்தங்களின் அறிகுறியான எழுத்துக்களைப் பின் கற்பிக்கவேண்டும்.

இந்தப் புஸ்தகத்திலுள்ள படங்களை நன்ருய் உபயோகிக்கவேண்டும். சில குழந்தைகள் அவற்றைப்போலவே உடனே எழுதிவிடுவார்கள். அந்தச் சக்தியை அறிந்து, உபாத்தியாயர்கள் அவர்களை உற்சாகப்படுத்தி, அச்சக்தியை விருத்திசெய்வதற்கு வேண்டிய ஒத்தாசை செய்யவேண்டும்.

சாதாரணமாய், ஒரு படத்தைக்காட்டி, அது எதைக்குறிக்கிறது என்று உபாத்தியாயர் கேட்டால், சிறுவர்கள் பதில் சொல்வார்கள். உடனே, அந்த வார்த்தைகளிலுள்ள சப்தங்களை வெவ்வேருகப் பிரிக்கச் சொல்லவேண்டும். அதற்குப்பின் சப்தத்தைக் குறிக்கும் அக்ஷரத்தை எழுதிக்காட்டவேண்டும். கிராமாந்தரங்களில் பிள்ளைகள் மனிதன் என்ற வார்த்தையை வாசிக்கும் விதம் இப்படி: ம னி மனி; த, மனித; ன், மனிதன். இது சரியான வழியல்ல. ஆரம்பத்திலிருந்து முழு வார்த்தையை ஒன்ருய்ப் படிக்கக் கற்றுக் கொடுக்கவேண்டும்.

அ என்னும் எழுத்தை முதலில் கற்பிப்பதற்கு நியாயம்:—

இந்தப் புஸ்தகத்தில், அனேகச்சிறந்த தமிழ் வித்துவான்களுடைய அபிப்பிராயத்தைத்தழுவி அ என்னும் அக்ஷரத்தை முதலில் கற்பிக்கிருேம். அந்த எழுத்தைக் கற்றுக்கொடுப்பது கஷ்டமாயினும், உலகத்திலுள்ள எல்லாப் பாஷைகளிலும் அது முதலெழுத்தாயிருப்பதாலும், வாயைத் திறந்தவுடன் சாதாரணமாய் உண்டாகும் சப்தம் அ ஆதலாலும், குழந்தைகள் முதல் முதல் பேசும் வார்த்தைகளான அக்கா, அம்மா, அப்பா, என்பவற்றினுடைய முதல் சப்தம் அ வாக இருத்தலாலும், வெகுகாலமாய் ஆரம்பத்தில் கற்கும் நூலுக்கு அரிச்சுவடி என்று பெயராதலாலும் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனர் "அகர முதலவெழுத்தெல்லாம்" என்று எழுதியிருத்தலாலும், அவ்வெழுத்தை மாத்திரம் ஸம்பிரதாயத்தை அனுசரித்து முதலில் காட்டியிருக்கிருேம்.

ஒரு பக்கத்திலுள்ள விஷயத்தை ஒரு நாளில் படித்து முடித்து விடவேண்டுமென்னும் அவசியமில்லை.

ஜகத் ரக்ஷகர் துணை

பால சிக்ஷை



அணில்

இந்த எழுத்தைக் கற்பிக்கும் முறை:

உபாத்தியாயர்:— இது என்ன படம்?

பையன்:- அணிற்பிள்ளை (அணிப்பிள்ளை)ப்படம்.

உ: அணிற்பிள்ளை — இந்த வார்த்தையில் முதல் சப்தம் என்ன?


பை:— அ

இதே விதம்:— **அம்மா அப்பா அக்கா**

என்ற வார்த்தைகளைச் சொல்லி அவைகளின் முதல் சப்தம் எதுவென்று கேட்டு, அ என்று பிள்ளைகள் சொல்லக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

பிறகு, பலகையில் அ என்ற சப்தத்தைக்குறிக்கும் அ என்ற எழுத்தை அநேகந் தடவை மெல்ல எழுதிக் காட்ட வேண்டும்.

ட	ட



ட்	ட்

டப்பி


மூன் பாடத்தில் அ என்னும் எழுத்தைக் கற்றுக் கொடுத்தது போல்,


இப்பொழுது ட என்னும் எழுத்தைக் கற்பிக்க வேண்டும்.

டப்பி டமாரம் டம்பம்

இந்த வார்த்தைகளில் முதல் சப்தம் ட என்று பிள்ளைகள் சொல்லவேண்டும். பிறகு அந்த சப்தத்தைக் குறிக்கும் ட என்னும் எழுத்தை அனேகந்தடவை எழுதிக் காட்டவேண்டும்.

அ	அ	அ	ட	ட	ட்





பம்பரம் பல்லி

ப	ப	ப்	ப்

பந்து பகல் பலகை

பல் பயிர் பச்சை


இந்த வார்த்தைகளில் எல்லாம் முதல் சப்தம் ப.

உபாத்தியாயர் ஒரு வார்த்தையை உச்சரிக்க, பிள்ளைகள் அதில் உள்ள சப்தங்களைச் சொல்லவேண்டும்.

மெய்யெழுத்துக்களின் சப்தத்தைத் தனியாய்ப் பிள்ளைகள் சொல்வது கஷ்டம்.

பழம் என்பதைப் பிள்ளைகள் ப ழ இம் என்று பிரிப்பார்கள். இது பிசகு. மெய்யை அதற்கு முன்வரும் எழுத்துடன் சேர்ப்பது நல்லது.

உதாரணம்:—பகல்—(ப கல்); பல்லி—(பல் லி); பச்சை—(பச் சை)





மணி. மரம்.


ம	ய	ம	ம	ய

படம் பட்டம்


மடம் மட்டம்

அப்பம் அடப்பம்

வ	வ



வண்டி.



ய	ய	ய

யந்திரம்.


பயம் வடம் வட்டம்

அ	ட	ப	ம	வ	ய
ட்	ப்	ம்	ட்	ப்	ம்

ல	ல்



க	க்



லக்ஷ்மி. கப்பல்.

பல் கல் கடல்

பயம் கபம் வயல்


அயல் பகல் மடல்

அகலம் கம்பம்


கலயம் கம்மல்

பக்கம் மயக்கம்

ச	ச்



ச	ச்



சங்கு.

சலம்	சவம்
சட்டம்	சகலம்
சப்பரம்	சமயம்
அச்சம்	சல்லடம்

க	ச	க்	ச்

த	த		த்	த்

தவளை.

தக்க தவம்

தட்ட சப்தம்


தடயம் சதயம்

பதக்கம் தவக்கம்


தக்க சமயம்.

கடல் சப்தம்.

அகப்பட்ட தடயம்.







ரம்பம்.

கரண்டி.

வர தர மரம்

வரம் தரம் சரம்

மலர் பலர் படர்

தகரம் சக்கரம்

பம்பரம் வர்த்தகம்

பட்ட மரம். பல தரம்.

பல வர்த்தகம். தச்சன் ரம்பம்.


ன		ன்
ன		ன்

அன்னம்.

அவன்	கனம்
அதன்	மகன்
அன்னம்	கடன்
தகப்பன்	கன்னம்

அவன் கன்னம். அதன் சன்னல்.
தகப்பன் படம். கப்பல் கனம்.
மகன் சப்தம். மகன் வயல்.
அவன் தகப்பன் கம்பன்.

ண	ண




ண	ண

கிண்ணம்.

கண் மண் மணல்
பணம் மணம் தணல்
பண்ண பண்டம் சணல்
அண்ணன் கண்ணன்
மண்டபம் வணக்கம்

அவன் அண்ணன். அதன் மணம். தகப்பன் பண்டம். கடல் மணல். மண்டபம் கட்ட. தச்சன் பணம். அவன் மகன் கண்ணன்.


ந
ந



நரி.

நட நகம் நடக்க
வந்த தந்த அந்த
நயம் நல்ல பந்தல்
தந்தம். கந்தன்

நல்ல மண்டபம். வந்த கப்பல்.
அவன் நல்லவன். அந்தத் தச்சன்.
சந்தன மணம். கண் தந்தவன்.
நல்ல மணம். தந்தப் பல்.



ழ	ழ	பழம்.	ழ்	ழ்

பழம் பழக


பவழம் பழக்கம்

வழக்கம் வழவழ

அந்தப் பழம். அவன் பவழம்.

நல்ல பழக்கம். பவழம் கனம்.


ட	ப	ம	ய	வ	ல
க	ச	த	ன	ண	ந



மத்தளம்.

மத்தளம்	வளர்ந்த
கள்ளன்	பள்ளன்
அவர்கள்	கண்கள்
பள்ளம்	மக்கள்
அவன்	மகள்

அவள் மகள். அவள் கம்மல்.
மத்தள சப்தம். கந்தன் கண்கள்.
வளர்ந்த மரம். அவன் பவழம்.



ங	ங்


சிங்கம்.

தங்கம்	தங்கள்
பழங்கள்	மங்களம்
சங்கடம்	லவங்கம்
பங்கசம்	கங்கணம்


அந்தப் பழங்கள். மங்கள சப்தம்.

அவள் கங்கணம்.

அவள் மகள் பங்கசம்.



முறம்.



ஊஞ்சல்.

ற	ற்
ஞ	ஞ்

மற கற்ற மற்ற

பற பற்கள் மறக்க

மஞ்சள் பஞ்சம்

மறந்த மற்றவன்

கந்தன் வஞ்சகன். நல்ல மஞ்சள்.

மஞ்சள் சந்தனம். மற்றக் கப்பல்.

ஆ	ஆ



ஆ	ஆ

ஆந்தை.

ஆர் ஆம் ஆண்

ஆள் ஆழம் ஆட்டம்

அந்த ஆலமரம், ஆள வந்தவன்.


நல்ல ஆட்டம். கடல் ஆழம்.

அந்த ஆள் நல்லவன்.

கற்றவன் ஆர்?

1	2	3	4	5	6	7

இ	இ



இ	இ

இலை.

இடம்	இவன்	இச்சகம்
இவர்	இவள்	இரவல்
இனம்	இந்த	இவர்கள்

இந்த மஞ்சள். இவன் நந்தன்.


இவள் ரங்கம். நல்ல இடம்.

இந்தத் தச்சன் நல்லவன்.

இந்தக் கடல் ஆழம்.

இடம் தந்தவன் ஆர்?

ஈ	ஈ



இ	இ

ஈக்கள்.

ஈரம் ஈயம் ஈரல்

ஈசல். ஈச்ச மரம்

அந்த இடம் ஈரம்.


ஈயம் கனம்.

இந்த ஈச்ச மரம்.

ஈயப் பணம்.

5	6	7	8	9	10

உ	உ



இ	ஈ

உரல்.

உன் உண் உழ

உடல் உரல் உண்ட

உயரம் உங்கள்

உரக்க உதயம்

இந்த உரல் அழகல்ல. உயர்ந்த ஆலமரம்.
உரல் பண்ண வந்தவன். உரத்த சப்தம்.
உங்கள் வர்த்தகம். அந்தச் சக்கரம் உயரம்.
உன் தகப்பன் நல்லவன்.

11	12	13	14	15	16	17

ஊ	ஊ



ஊ	ஊ

ஊசி.


அ	ஆ	இ	ஈ
உ	ஊ	உ	ஊ


ஊதல் ஊஞ்சல்

ஊசல் ஊனம்


ஊசச் சந்தனம். உயர்ந்த ஊஞ்சல்.

நல்ல ஊதல். இந்த ஊற்றப்பம்.





எருமை.　　　　எலி.



எவன் எவர் எவள்

எள் எந்த என்ன


எமன் எண் எங்கள்

எவர்கள் எண்ணம்

எந்த இடம்.
எம பயம்.
என் கப்பல்.
தச்சன் எவன்?

சங்கடம் என்ன?
நல்ல எண்ணம்.
எவன் நல்லவன்?
எங்கள் தர்மம்.

எ	எ	எ	எ



ஏணி.

ஏர் ஏன் ஏற

ஏலம் ஏனம் ஏற்ற

ஏய்க்க ஏப்பம் ஏக்கம்


ஏலம் நல்ல மணம்.

அவன் கப்பல் ஏற வந்தவன்.

ஏர் உழ நல்ல சமயம்.

ஏன் இந்த சங்கடம்?

14	15	16	17	18	19	20



ஐ	ஐ

ஐந்து இலைகள்.


ஐ	ஐ	ஐ	ஐ	ஐ


ஐயர் ஐயன் ஐவர்

அந்த ஐயர் நல்லவர்.
ரங்க ஐயன் என் அண்ணன்.
அந்த மண்டபம் கட்ட பணம்
தந்த ஐயர் எவர்?

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ







ஒட்டகம். ஒட்டியாணம்.

ஒட்ட ஒண்ட ஒத்த

ஒட்டன் ஒட்டகம்

ஒத்த சமயம்.


இந்த ஒட்டன் எந்த ஊர்?


அந்த ஒட்டகம் உயரம்.

ஒண்ட வந்த தச்சன்.

எ	ஒ	அ	இ	உ	ஆ	ஈ	ஊ







ஓணான்.

ஓட ஓடம் ஓட்டம்

ஓர் ஓரம் ஓமம்

நல்ல ஓடம். கடல் ஓரம்.
ஓமம் மணம் நல்ல மணம்.
அவன் பந்தயம் ஓட வந்தவன்.

எ	ஏ	ஐ	ஒ	ஓ
2	4	6	8	10





ஹ

ஔஷதம். மஹான்.

ஔ	ஔ	ஔ	ஔ
ஷ	ஷ	ஷ	ஷ

ஔஷதம் கஷ்டம்

நஷ்டம் இஷ்டம்

ஸ






ஜ

ஸர்ப்பம். இராஜன்.







க்ஷ

நக்ஷத்திரம்.

ஜனம் ஜலம் ஜன்னல்

ரஸம் பக்ஷம் ஸர்ப்பம்

ஸ்தலம் ஸரம் அக்ஷரம்

[பத்துக்கு மேற்படாத இரண்டு எண்களைக் கூட்டல்]

1	+ 1 =	2	1	+ 2 =	3	1	+ 3 =	4
2		3	2		4	2		5
3		4	3		5	3		6
4		5	4		6	4		7
5		6	5		7	5		8
6		7	6		8	6		9
7		8	7		9	7		10
8		9	8		10	8		11
9		10	9		11	9		12
10		11	10		12	10		13

1	+ 4 =	5	1	+ 5 =	6	1	+ 6 =	7
2		6	2		7	2		8
3		7	3		8	3		9
4		8	4		9	4		10
5		9	5		10	5		11
6		10	6		11	6		12
7		11	7		12	7		13
8		12	8		13	8		14
9		13	9		14	9		15
10		14	10		15	10		16

1	+ 7 =	8	1	+ 8 =	9	1	+ 9 =	10
2		9	2		10	2		11
3		10	3		11	3		12
4		11	4		12	4		13
5		12	5		13	5		14
6		13	6		14	6		15
7		14	7		15	7		16
8		15	8		16	8		17
9		16	9		17	9		18
10		17	10		18	10		19